உளி- 1 | ஓசை-74 | ஜுன்-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

•

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டடீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | | | |
|---|---|---|---|
| புதுகை விஜய்ஆனந்த் | -4 | ம. இராதா | -22 |
| செ.புனிதஜோதி | -4 | செ. வீரமணி | -23 |
| சிவசந்திரன் | -5 | தீபிகா சுரேஷ் | -24 |
| மா.மனோகரன் | -5 | கதிரவன் வீ | -25 |
| சீ. பாஸ்கர் | -6 | அ.சீனிவாசன் | -25 |
| தி.கலையரசி | -7 | மகிழினி காயத்ரி | -26 |
| ஐ.தர்மசிங் | -8 | பிரியா பாஸ்கரன் | -27 |
| கி. சரஸ்வதி | -9 | தங்கேஸ் | -28 |
| கோ. பாரதிமோகன் | -9 | அருண்குமார் ப ஆ | -29 |
| கலைச் செல்வி | -10 | விஜி | -29 |
| பூங்கோதை கனகராஜன் | -10 | சிபூ | -29 |
| மதுரா | -11 | செந்தாரப்பட்டி செல்வக்குமார் | -30 |
| மா. காளிதாஸ் | -11 | கோ.லீலா | -31 |
| க.ராஜகுமாரன் | -12 | நெல்லை. க.சோமசுந்தரி | -32 |
| ச.ஆனந்தகுமார் | -12 | நா.கி.பிரசாத் | -32 |
| சுப. முத்துக்குமார் | -13 | குடந்தை அனிதா | -33 |
| சந்துரு ஆர்.சி | -13 | சுபி | -34 |
| அன்பு மணிவேல் | -14 | சித்ராபுபேஷ்குப்தா | -34 |
| ஜோதி சரண் | -15 | காசாவயல் கண்ணன். | -35 |
| பிரபுசங்கர் க | -16 | மீ. யூசுப் ஜாகிர் | -35 |
| கவி. விஜய் | -17 | வே.மு.ஜெயந்தன் | -36 |
| கதிரிளவன் இரவிக்குமார் | -18 | பன்னீர்செல்வம் | -36 |
| மகேஷ் சிபி | -18 | சபேஷா கண்ணதாசன் | -37 |
| யாழினி | -19 | மு.கீதா | -37 |
| சுஜாதா கண்ணன் | -19 | ஆடலரசன் குடந்தை | -38 |
| நயினார் | -20 | உமா மஹேஸ்வரி பால்ராஜ். | -38 |
| குளோரிசக்தி | -21 | பாத்திமா சுமையா | -39 |



நாணித் தலை சாயும்
நாணலென கிடக்கிறேன்
உன் கடலளவு நினைவுகள்
என் கரை தொட்டுக்-
கடக்கும்
போதெல்லாம்

உன் நினைவுகள்
ஒரு மீன் ஆனால்- நான்
ஒற்றைக் கால் தவம்
புரிகிறேன் நெடு
நேரமாய்

தண்ணீரில் தத்தளிக்கும்
இந்த சிற்றெரும்புக்கு
உன் நினைவின் இலையொன்றை
உதிர்த்து விட்டுப் போ...

இப்பிறவிப்பெருங்கடல் கடந்திடுவேனடி..!

➤ புதுகை விஜய்ஆனந்த்

காற்றில்
இலை அசைவதைப்போல்
உன்
நினைவொளியால்
அசைகிறேன்
அது
பகலுக்கும்
இரவுக்குமிடையே
ஒரு அந்தியை வரைகிறது

➤ செ.புனிதஜோதி



ஆட்டுக்குட்டி யை வாஞ்சையோடு கொஞ்சிய ஏசு
ஈரலுக்கு கறிக்கடையில் நின்றிருந்தார்'

மாரியம்மா வந்து ஆக்ரோஷமாக ஆடிய அவள் தான்
இப்போது தன் குழந்தையிடம் குழந்தையாகி
கொஞ்சிக் கொண்டிருந்தாள்'

போர்களத்தில்
கீதையை உபதேசித்த கிருஷ்ணன்
இப்போது தொழுகைக்கு தயாரானான்'

பாஞ்சாலியின் துகிலுரித்த துரியோதனன்
கிழிந்த ரவிக்கையோடு அலைந்த மனநிலை
பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தன் சட்டையை
மாட்டிவிட்டுக்கொண்டிருந்தான்'

திருவிழாவின் கலைஞர்கள்
தங்கள் உண்மை முகத்தை எப்போதாவது தான்
மற்றவர்களுக்கு அறிய தருகிறார்கள்.

➤ சிவசந்திரன்

வாங்கிய பஜ்ஜியை செய்தி தாளொன்றில் அழுத்தியப்
பின் எந்த சலனமுமின்றி விழுங்குகிறான் என் எதிர்
இருக்கை ரயில் பயணி!

மூன்று ரயில்கள் மோதிக்கொண்ட கொடியச்
செய்தியை தாங்கிய அந்த செய்தித்தாள்
பஜ்ஜி எண்ணையில் நனைந்து விட்டிருந்தது
குருதியில் நனைந்த ரயில் தடம் போல!

இரயில் அதன் பாதையில் போகிறது
எந்தபிரக்ஞையுமின்றி!
அவன் தொண்டைக்குள் செல்லும் பஜ்ஜியைப் போல!

➤ மா.மனோகரன்

# அம்மா இல்லாத வீடு



தினமும் சாமி படங்களின்முன்
விளக்கேற்றியவள்
இன்று விளக்கின் முன் சாமியாக

அம்மா வேண்டுமென்று
அழுது அடம்பிடிக்கும்
சின்னவளிடம்
சாமியைப் பார்க்கச்
சென்றிருக்கும் அம்மா
இன்று வந்துவிடுவாளென்று சொல்லியே
தினமும் சமாளித்து வருகிறார் அப்பா

அக்காவிடம் அவ்வப்போது
சின்னச் சின்ன சண்டைகள் போடும் சின்னவள்
சொல்லிக்கொண்டே இருக்கிறாள்
அம்மா வந்ததும்
சொல்லி விடுவேன் என்று

பெரியவள்
பெரியவளான பின்புதான்
இன்னொரு அம்மா உருவாகிறாள் இல்லத்தில்

சாமியை பார்க்கச்சென்ற அம்மா
இனியும் திரும்பி வரமாட்டாள் என்றுணர்ந்த
சின்னவள்
தினமும் வணங்கத் தொடங்குகிறாள்
அம்மா சாமியை

விளக்கேற்றியபின்
விளக்கின் வெளிச்சத்தில்
அம்மாவின் முகத்தைத் தேடுகிறது
அவளின் விழிகள்

➤ சீ. பாஸ்கர்



உன் கடலில் கலந்து விட்ட
நீர்த்துளி நான்.
ஆவியாய் கரையும் விதியை
நீ தான் எழுத வேண்டும்.

சிக்கவிழ்க்கவே முடியாத
முடிச்சு நீ
நான் உன்னைப் படிக்க
என்னுயிரை அவிழ்க்கிறாய்.

கண்ணீர் துளிகள்
தீர்த்த நதி எனக்கு.
அதில் மூழ்கும் காதல்
தன்னைப் பரிசுத்தமாக்கிக் கொள்கிறது.

மழைத்துளிக்காக மிதக்கும்
சிப்பியின் அல்லல்
என்னுடையது.
நீயற்ற வறட்சியின் ஆழத்தில்
மூழ்கடிப்பது
எவ்வகை முரண்?

ஆதி அந்தமின்றி என்னில்
சுயம்புவாக வளர்கிறாய்.
‘நான்’ அற்றுத் தேய்வது
வரமா? சாபமா?

➤ தி.கலையரசி



வலது பக்கத்தில்
வானளாவிய
கோபுரத்தோடு கோயில்

இடது பக்கத்தில்
சவப்பெட்டி
விற்பனைக் கடை

நடுப் பக்கத்தில்
நவீன மயமான
மருத்துவமனை

கோயிலில்
காணிக்கைப் பெட்டியும்

கடையில்
கல்லாப் பெட்டியும்

மருத்துவமனையில்
“ பணம் செலுத்தும் இடமும்”...

மனிதனை நம்பிய
காத்திருப்பில்
மூன்று இடங்களும்

ஒன்றை நம்பும் போது
இரண்டினை மறுக்கிறான்
மனிதன்

மூன்றையும்
நம்ப வைக்கிறது
காலம் ...

➤ ஐ.தர்மசிங்

# ஹாப்பி பர்த்டே



குப்பையில் கண்டெடுத்த
தலைக்கூம்பினைச்
சூடிக் கொண்டதும்
வந்துவிடுகிறது
தேதியறியாத
சாலையோரக் குழந்தைகளின்
பிறந்தநாள்

➤ கி. சரஸ்வதி

இதயத்தின் பாவத்தை
கொட்டிக் கொள்ளத்தான்
வந்துதொலைகிறது காதல்

நீ சாபம்
உன்னை வாங்கத்தான்
நான்
பாவம் செய்கிறேன்

இதயத்தின் நிர்வாணம்
உன் ஞாபகத்தை
உடுத்திக்கொள்கிறது

காதல்
இருவழிப் பாதை
நான் வருகிறேன்
நீ போகிறாய்

உன் கண்களுக்குள்
கூடுகட்டிக் கொள்கிறது
என் கனவு

➤ கோ. பாரதிமோகன்

# ஏழாம் நம்பர் பஸ்ஸில் ஏறியிருக்கக்கூடாது



சட்டென்று
நெற்றி வகிட்டில் கைவைத்து
ஆசிர்வதித்து விடுகிறாள் அந்தத் திருநங்கை

ஆசிர்வதித்துவிட்டு காசு கேட்க வேண்டும்.
ஆசிர்வதித்தால்
காசு தர வேண்டும்
பொதுவாகப் போதிக்கப்பட்டது இப்படித்தான்

இரண்டுமே நடக்கவில்லை

இப்போது ஓர் ஆசிர்வாதத்திற்கு கடன்காரி நான்.
.

➤ கலைச் செல்வி

அடர்வனத்தில் பதுங்கியிருந்த காற்று பயம்
தீர்ந்து வெளிவருகிறது
மழையோடு

அனல் காற்றின்
வெக்கையில்
மரத்தடி மடியில்
இளைப்போடு பெருமூச்சு நீங்கித் தலைநீட்டுகின்றன
நான்கு கால் உயிரினங்கள்

நடமாடும் தகரக்கொட்டகையான பேருந்தில்
நொந்து வெந்த இரண்டு கால் மனித உயிரினங்கள்
ஆசுவாசிக்கின்றன

அள்ளித் தெளித்த
புனித நீர் புவனம்
முழுவதும் பாய்விரிக்க

மழை பெய்கிறது
ஜன்னல் வழியாக துளித்துளியாக இறங்குகிறேன்
வெயிலில்
சுருண்டிருந்த நான்

➤ பூங்கோதை கனகராஜன்



தாழ்திறவா நெடுங்கதவம் முன்
காத்துக் கிடக்கிறது காலம்..
வாய்ப்புகளின் வரையறைக்குள்
தெளிந்தும் தெளியாத நீள் மௌனமொன்று
நிறைந்து கிடக்கிறது...

படைப்புகளின் பட்டியல் சின்னஞ்சிறு
கவிதைகளாய் சரம்சரமாய்த்
தொங்குவதைக் காண விழையாமல்
கண்மூடிக் கிடந்தாலும்...

செல்ல சிணுங்கல்களின்
சப்த ஒலி செவி நிறைக்கையில்
தானென்ற அகந்தைக்குள்...
தத்தளித்துத் தடுமாறி
கரையேற விரும்பாமல்
கவிழ்ந்து கிடக்கையில்
களவாடப்பட்டவை எத்தனையோ?

முத்துகளின் தரமட்டுமன்றி
விளைவித்த சிப்பிகளின்
சரித்திரமும் சீர்தூக்கிப் பார்க்கப்படுகிறது சிலநேரம்...

➤ மதுரா

கயிறைக் கட்டி
வாளியை உள்ளே இறக்கினாய்.
ஒருதுளி கூட சிந்தாமல்
மிகக் கவனமாக மேலிழுத்தாய்.
உடலை நனைக்க நனைக்க
கிணற்றடியில்
திட்டுத்திட்டாக உறைகிறது வெக்கை.
நீ அறிவாயா
கிணறென்பது வேறொன்றும் இல்லை
வியர்வைத்துளிகளால்
பாதி நிரம்பிய கோப்பையே.

➤ மா. காளிதாஸ்



விடைபெறுதலின் கடைசியில்
எதோ ஒன்றிற்கான
நன்றி என்ற வார்த்தை உன்னிலிருந்து வெளிவந்த
போது நான் எதிர் திசையில் நடக்கத்தொடங்கினேன்...
முதல் அடியை
ஏழுமலையிலும்
மறு அடியை
ஏழுகடலையும் வைத்து தாண்டியதாய்
ஓர் உணர்வு..
வழி தொலைந்த வனத்திற்குள்
இலையுதிர் கால பாடல்
எனக்குள்ளிருந்து உன்னை தேடுகிறது
அண்மையின் இடைவெளி
அவ்வளவு தூரமானதா..?

➤ க.ராஜகுமாரன்

வித்தை செய்வதாய்..
கைவிட்டு ஓட்டினேன்
நெருப்பு வளையத்தில்
புகுந்து வந்தேன்
சிங்கத்தின் கூண்டினுள்
அமர்ந்து கொண்டேன
யானையை பெஞ்சில்
நிற்க வைத்தேன்..
கைதட்டல் வானைப் பிளந்தது..
திரும்ப திரும்ப
அலைமோதியது கூட்டம்..
தேடிப் பார்த்தேன் அம்மாவை மட்டும் காணவில்லை..
கடைசியாய் கண்டுபிடித்தேன்
கண்மூடி நின்றிருந்தாள்
எதிரிலிருந்த பிள்ளையார் கோவிலில்..

➤ ச.ஆனந்தகுமார்



கடைசியாக அவளை
அந்தக் கவிதையில் சந்தித்தது
அதன்பின்
அந்த முத்தத்தின் திருப்பத்தில்
ஒருமுறை சட்டென மறைந்தாள்
பிறகொரு முறை மழையாக
ஆனால்
மறதியாக
நான் கையில்
குடை வைத்திருந்தேன்
நீண்ட நாட்களுக்குப்பின்
சிறுகதை ஒன்றின் நடுவே
ஹைக்கூவாய் நடந்து போனாள்
இப்போது
இதோ
அடுத்த கவிதைக்கான
வாசல் கதவின் குறுக்கே
நின்று கொண்டிருக்கிறாள்
சரக்கொன்றைப் பூக்கள்
என் காகிதத்தில்
தூறிக் கொண்டிருக்கின்றன.

➤ சுப. முத்துக்குமார்

எப்போதும்
தியானத்தில் அமர்ந்திருக்கும்
துறவியிடம்
குரங்கு கேட்கிறது
நீ வருத்திக்கொண்டு
தேடும் ஒன்று
இயல்பிலேயே
என்னிடம் இருக்கிறது
உன்னிடமும்...!

➤ சந்துரு ஆர்.சி

தள்ளாத வயசுல
வேகாத வெய்யிலை
இப்படித் தூக்கிச் சுமக்கனுமா யென்று
கடிந்துகொண்டே
மோரை நீட்டுகிறேன்
காய்க்காரப் பாட்டிக்கு.

குடிகாரனக் கட்டிக்கிட்டு
அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாடுது மக...
பேத்தி இந்த வருசம் காலேசு
முடிக்கிது..
எப்புடியாச்சும் ஒரு வேலையைப் புடிச்சு அது
நிமிந்துட்டா
நான் ஒக்காந்து சாப்புட்டுப் போறேன்
என்ன இப்போ..
என்று வெய்யிலொழுகப்
புலம்புகிறாள்.

இரவெல்லாம் அந்த முதுமைக்கு நான் விசனப்பட்டுக்
கிடக்க..
நாளை  வந்து புலம்புவாள்..
பாக்கியலட்சுமிக்கும்
பாண்டியன் ஸ்டோருக்கும்.

➤ அன்பு மணிவேல்



எதிலோ இடறி விழும் நேரத்தில் சறுக்கி விழுந்து
கிடப்பவருக்கு உதவிக்கரம்
நீட்டி சமன்செய்து நின்றுவிடுகிறேன்!!

புரிந்து கொள்ளாது புறக்கணிக்கப்படும் போது
தனிமையில் தத்தளிக்கும்
ஒற்றை இதயத்தின் தலையில்
ஆறுதல் நீர் தெளிக்கின்றேன்!!

கண்ணில் விழுந்த தூசியாக
சூழல் உறுத்தும் போது பிறர் கண்ணில் தூசி
எடுப்பதில்
கவனமாகிறேன்!!

சில முகமூடி விலகி உண்மை முகம் அறியும் போது
கண்ணீர் மறைக்க  கனத்த ஒப்பனையிட்டு ஏதோ ஒரு
முகத்தின் புன்னகைக்கு உத்தரவாதமிடுகிறேன்!!

இத்தனைக்கும் மேலே
அன்பில் நிறை இதயங்கள்
நலம் விரும்பிப் பிரார்த்தனை
ஒன்று எங்கோ ஓர்
ஆலய மணியாக ஒலித்துக்
கொண்டு தான் இருக்கும்
என்ற நம்பிக்கை சுடரிடுகிறது
ஆன்ம வனத்தில்

➤ ஜோதி சரண்

# அவளின் பாதங்கள்



கவனிக்கப்படாத நட்சத்திரங்கள்
அவளின் பாத விரல்கள்....

ஒவ்வொரு விரலும்
ஒவ்வொரு திசையில்
ஊசலாடும் அவள்
மனநிலையின் பிம்பமாக ....

பின்பாத வெடிப்புகளின்
எண்ணிக்கை பறைசாற்றுகிறது
இதுவரை நிகழ்ந்த
ஊடல்களின் கணக்கை....

கழற்றாத மெட்டிகளின் அச்சுகள்
தெகிட்டாத காதலின் முத்திரைகள்....

ரீங்காரமிடும் கொலுசுகள்
அவள் பாதங்களின் கிரீடங்கள்....

இத்தனை ஆண்டுகளில் முதன்முறையாக
அவள் பாத இடுக்கில்
ஒரு குட்டி மச்சத்தை
கண்டு பிடித்திருக்கிறேன்....

“யுரேகா யுரேகா” உரக்க கத்தியபடி
அந்த மச்சத்தில் கொடுத்த முத்தத்தை
யாரேனும் ஆவணப்படுத்தி
ஒரு காவியம் எழுதுங்களேன்....

➤ பிரபுசங்கர் க



பாதையைத் தொடர்கிறது ஒளி
ஒளியைத் தொடர்கிறது
விளக்கு.

.

மழைக்குப் பின்
வானை அளந்து போகும்
ஒற்றை இலை.

.

வறண்ட குளம்
இடம்பெயற மறுக்கும்
பழகிய கொக்கு.

.

தார் சாலையில்
இந்திக்காரன் கால்தடம்
உருக்கி அழிக்கிறது வெயில்.

.

அக்கரையைத் தொடுகிறது
நீரின்மேல் நீண்டு விழும்
சிறு விளக்கின் ஒளி.

.

வெயிலில் சிறுமி
பாதங்களுக்கும் சேர்ந்தே
விழும் தொப்பியின் நிழல்.

➤ கவி. விஜய்



எதன் மீது வினா தொடுப்பாய்?

நீ படர நினைக்கும்
அந்த மரம்
தனக்கான பூப்பையும்
காய்ப்பையும் கனிப்பையும் தான்
அதீதம் எதிர்நோக்கியுள்ளது
உன்னை சுமத்தல்
அதன் படைப்பின் கட்டளையாக
நிர்ணயிக்கப் படவில்லை
நீயாகப் படர்
அஃதுன்னை தூக்கி எரியாது
அதற்காக ஏன்
கைக்கொடுக்கவில்லை என்று
வினா தொடுக்கவும் முடியாது.

➤ கதிரிளவன் இரவிக்குமார்

பணம் பெற்றுக்கொண்டு
கடவுளைப் போல்
சும்மாயிருப்பதில்லை திருநங்கை
சட்டென்று
ஆசீர்வதித்துவிடுகிறாள்

➤ மகேஷ் சிபி



சிறகுகளை உலர்த்தும்
இளம்வெய்யில் உன் நேசம்
சமவெளியின் சகிப்புகளைத் துறக்கச்செய்யும்
மலைமுகடு உன் காதல்
அழுத்தத்தின் வெம்மையில்
அழுகத்தொடங்கிய வேரை
இளைப்பாறச்செய்த பெருமழை
உன் மனம்
முழுக்க முழுக்க உன்னைச்சார்ந்த பின்
கைமாறாய் பிரிவையே தேர்ந்தெடுத்தாய்..
நிறை அன்பிற்கு ஈடாய்
வேறெதுவும் இல்லை என்பதால்

➤ யாழினி

தனக்காக ஒருபோதும்
கரை மீறியதில்லை
பரந்திருக்கும் கடல்

அலையாடும் துன்பங்களை
நெஞ்சு விம்ம விழுங்கி
கண்ணீர்ச் சேகரத்துள்
கரித்துச் சிரிப்பவள்
கடலன்னையின்
அம்சமாய்

➤ சுஜாதா கண்ணன்



நான் விழித்திருந்து எழுத
நீ தேநீர் தருவது இருக்கட்டும்
என்ன எழுதினாய்
என்று கேட்கிறார்கள்
சிலர் எழுதியதை வாசி என்கிறார்கள்

நான் உதடுகளால்
புள்ளிதான் வைத்தேன்
விரல்களால் நீதான்
கோலம் போட்டாய்
என்று சொல்லவா

எழுதிய கவிதையெல்லாம்
எங்கள் வியர்வையில்
அழிந்துவிட்டது என்று சொல்லவா

துள்ளி வந்த சொற்களை
துரத்தி பிடிப்பதற்குள்
வரிகளுக்கிடையே
விழுந்துவிட்டது என சொல்லவா

தெறித்த எழுத்துக்களை
சொற்களாக கோர்த்து
கவிதையென தருவதற்குள்
உன் வெட்கம்
விழுங்கிவிட்டதென சொல்லவா

என்ன சொல்வது
எப்படிச் சொல்வது
ஒரு கவிதையை
நான் வாசிப்பதைத்தான்
இங்கு வந்து எழுதுகிறேன் என்று
புரியும்படி சொல்லிவிடவா

➤ நயினார்



இன்னும் இருக்கின்றன
மண்பாதைகள்
மண்ணின் மணத்தைத்
தன் மைந்தர்களுக்குக்
கொடுத்துக் கொடுத்துச்
சலிக்காத தாயாய்
மலைக்கிராமத்துப் பாதைகள்

மகிழுந்து பார்க்காத
அப்பாதைகள்
உழைப்பின் மேன்மையை
உணர்ந்தவாறு
தன்னுள்ளே அன்பின் ஊற்றையும்
உயிர் நீரையும்
தேக்கி வைத்துள்ளன.

ஊருணி சென்று
நீர் எடுத்து வந்தாலும்
உயிருக்குள் பாசத்தைக்
கட்டி வைத்த
மக்களை
சுமக்கின்ற பாதைகள்
ஏந்துவதில்லை
நெகிழிக்குப்பைகளை.

➤ குளோரிசக்தி



பிணைந்திருக்கும் போது
நாகத்தையும்
கலைந்திருக்கும் போது
கருமேகத்தையும்
நிகர்த்த
கருங்கூந்தல்
கால்வரை புரள்வதே
அவளின்
அடையாளம்...!!

பத்தாண்டுகளுக்குப்
பிறகு
பேருந்து நிலையத்தில்
பார்த்த போது
பதறிப் போய்விட்டது..!!

வகுப்புத் தோழிகளின்
கண்பட்டும்
கைபட்டும்
கரும்பட்டுக்
காடாய்க்
கிடந்த கூந்தலைக்
குழந்தையின்
நேர்த்திக் கடனுக்காகத்
துறந்து விட்ட
தாயாய் மாறிப்
போயிருந்தாள்..!

ஆற்றாற்றுப் போயும்
ஆறவில்லை மனம்!
ஆண்டு பல கடந்த
மீண்டுமொரு
சந்திப்பில்
வளர்ந்திருந்தது
ஏதோ கொஞ்சமாய்..!!!

அவள்
அது பற்றிய
பிரக்ஞை ஏதுமற்றவளாய்
அவளுக்கேயான
பிள்ளைச் சிரிப்பைத்
தொலைக்காதிருந்தாள்.,.!!!

ம. இராதா



சன்னதம் வந்த
பூவாயி அத்தை
அருள்வாக்கு சொன்னபோது
நீ ஆத்தா
நான் பாலகன்

ஊர் திருவிழாவில்
அப்பன் தோள் ஏறி
திருமுகம் கண்டபோது
நீ அன்னை
நான் பிள்ளை

குடமெடுத்த மாமன்
மஞ்சள் பூசி
கொலுசணிந்த பாதங்களுடன்
வாசலுக்கே வந்து
அருள்பாலித்தபோது
நீ அம்மன்
நான் பக்தன்

மாணிக்கச்சிவப்பில்
மூக்குத்தி மின்ன
மரகத குண்டலம்
காதினில் ஆட
ஆணிப்பொன் முத்து
மாலைகள் சூடி

நூறு ரூபாய்
கூடுதல் கட்டணத்தில்
சிறப்பு தரிசனம்
தந்தபோது ...

நீ யாரோ
நான் யாரோ

➤ செ. வீரமணி



அலுவலகம் போகும் வழியில்
பேருந்து நெரிசலின் இடையில்
ஒரு பட்டாம்பூச்சி என்னை
முத்தமிட வந்ததை
மிகவும் மகிழ்வோடு
நண்பர்களிடம் பகிர்கிறேன்

ஒருத்தி தலையில்
அடித்துக் கொள்கிறாள்

ஒருவன் உன்னைத்
திருத்தவே முடியாது என்கிறான்

உன்னைப் போல் பைத்தியம் வேரில்லை என்கிறான்
இன்னொருவன்

சிரித்தபடியே நான் சொல்லும் அழகை ரசிக்கிறான்
ஒருவன்

நீ எப்ப தான் வளர்வாய்
அங்கலாய்க்கிறாள் தோழி

நான் மட்டும் நம்புகிறேன்
பட்டாம்பூச்சி என்னைத் தேடி
என்னை மட்டும் முத்தமிட்டதாய்

சிறகுகள் துளிர்க்கிறது
எனக்கும்.

➤ தீபிகா சுரேஷ்



கைகளில் மணல் அள்ளி வந்த சிறுவன் மலை என்றான்
கொப்பரையில் நீர் கொண்டு வந்த சிறுமி கடல் என்றாள்
இன்னும் சில சிறுவர் சிறுமிகள் தாங்கள் கொண்டு வந்ததை மிக பிரமாண்டமாக சொன்னார்கள்
கூட்டாஞ்சோறு விளையாட்டில் தவறியும் யாரும் சாதி கொண்டு வரவில்லை

➤ கதிரவன் வீ

ஆதியில் பூக்களைப்
பறிக்கும் பழக்கத்தை
ஆரம்பித்து வைத்த
ஏதோவொரு
காட்டுமிராண்டி தான்
முதல் சாணக்கியன்.

குற்றத்தை
மறைக்க கடவுளுக்கும்
சூட்டி அந்நாளிலேயே
அரசியல்
செய்திருக்கின்றான்!

➤ அ.சீனிவாசன்



மழையும் வெய்யிலுமாய்
குழம்பிக் கிடக்கிறது
வானம்

அசையும் கீற்றில்
அளவளாவிக்
கொண்டிருக்கிறது
காற்று

அதுவரை
தின்று தீர்த்த
வெம்மையைக்
காணவென
தாள முடியாக்
காதலுடன்
ஓடோடி
வருகிறது
கடல்

இன்று
பூத்திருக்கிறது
முற்றத்து
பாரிஜாதம்
நிலவுடன்

நாளைக்கென
கொஞ்சம்
மிச்சமிருக்கும்
எல்லாமே

வாசனையோடு
கமழ்ந்து கொண்டிருக்கும்
இந்த மழை அந்தி
நெடுங்காலம்
நினைவில்
இருக்கும்
மழைத்தும்பியின்
இறகுகளை
சுமந்தபடி

➤ மகிழினி காயத்ரி

# காற்று

சூடாகவும் குளிர்ச்சியாகவும்
மென்மையான திரளில் தீண்டும் காற்றாய்
இதயத்தைத் தழுவுகிறது
பார்வை

எப்பொழுது வேகமெடுக்குமென
அறியாக் காற்றைப் போல
மாறுகிறது
மென் தீண்டலிலிருந்து புயலின் சறுக்கலுக்கு

செஃபிரின் பாடலான 'Sweet Nothing'யை போல
இனிமையான வார்த்தைகளால் ஆத்மாவில்
ஆசையைக் கிளறி தீடீர் காற்றாய்க்
கனவுகளைக் காதல் நிறைந்த வானத்திற்குக்
கொண்டு செல்லும்
நீயே தான்

மௌன வருத்தத்தில் ஏங்க வைத்து
மனதில் ஆழத்தில்
நினைவுகளை மட்டும் விட்டுச் செல்கிறாய்
திசைமாறும் காற்றாய்

கருணையுடன் திரும்புகையில்
கனன்று கொண்டிருக்கும்
நேச நெருப்பை உணர்ச்சி காற்றில் ஊதி ஊதி
அரவணைக்கிறாய்
நுரையீரலை ஆசை சுவாசத்தால் நிரப்பி

சுதந்திரக் காற்றாய் அலைந்து திரிந்து
உலகெங்கும் சுற்றினாலும்
நம்மிடையேயிருக்கும் பாதையை மட்டும்
நீ செப்பனிடத் தவறியதே
இல்லை

உனது இருப்பில்
நான் மூச்சு விடாத குழந்தையாகவும்
இருக்கிறேன்
புயலில் சிக்கிய இலைகளாகவும் நடனமாடுகிறேன்
'நான் நானாக' இருக்க விடும் 'நீ' என்றும்
கட்டிவைக்க முடியாத காற்றாகவே
இரு
என் அன்பே!



உணர்வுகள் மிகுந்து ஆன்மாவை வருடும்
அன்பின் நொடிகளில்
மகிழ்ச்சியைத் தூண்டும் இயற்கை சக்தியான
காட்டுக் காற்றின் கர்ஜனைக்கு
ஒப்பிடுகிறேன்
உன்னை

➤ பிரியா பாஸ்கரன்



எதிர்பார்ப்பின்றி வெறித்துக்கிடக்கும்
விழிகளுக்குத் தெரியும்
இந்த வீதியில்
என்றென்றைக்கும் நீ வரப்போவதில்லை என்று

நீ வந்து போன உற்சவ காலத்திற்கு
இந்த வீதியை தூக்கி சென்று விட எத்தனிக்கும்
மனதிற்கும் தெரியும்

அந்த மஞ்சள் அரளிப்பூவும்
இடம் வலமாக நீந்திப்போகும் சாம்பல் புறா ஒன்றும்
உடைகலைத்து சுழன்றோடிய கோடைகாற்றும்
மற்றும் இந்த வீதியில் தென்பட்ட எதுவொன்றும்
அன்றிலிருந்து இன்றிற்கு திரும்பி வராதென்றால்
இந்த வீதி மட்டும் திரும்பிவிடுமோ
காலமற்ற காலத்திற்கு ?

ஆளரவமற்ற நட்ட நடு நிசியில்
ஒளி உடல் உதிர்க்கும்
எரிநட்சத்திரமும்
திசை தொலைத்து பறந்தலையும்
கரையும் காகம் ஒன்றும்
உறைந்த காலத்திற்கு
அகாலத்தில் பயணிப்பதை கண்டபின்

இறகாய் சுழன்று உதிர்ந்து கொண்டிருக்கும்
இந்த இரவை
என் கைகளில் எடுத்து முத்தமிட்டு
சட்டைப்பையில் வைத்துச்செல்கிறேன்
நினைவாக

➤ தங்கேஸ்



எரியும் காதல்....
எரிபொருளாய் கண்ணீர்....
காற்று பூசிக்கொள்கிறது இச்சாம்பலை....

➤ அருண்குமார் ப ஆ

வெட்டுப்பட்ட ஆடு குறித்து
யாதொரு சலனமும் இன்றி
மெய்ப்பனின் கையை
நக்கிக் கொண்டிருந்தது
இன்னொரு ஆடு

அடிபட்ட ஆட்டுக்கு
மருந்திட்டவன் தான்
அதை வெட்டுபவனும்

➤ விஜி

குளியலறையில்
செங்குழவி கூட்டில்
நெளிந்த புழுக்கள்
இறகு முளைத்து
பறக்கும் முன்
உடைக்க மறுக்கும்
மனைவியின் தாய்மை
எல்லா உயிர்களுக்குமானது...

➤ சிபூ

# வெங்காட்டுப் படலம்



அந்த நெடும்பனை
தலை சாய்ந்த நாளில்தான்
தாத்தா படுக்கையில் விழுந்ததாக
சந்தனம் மாமா
எப்போதோ சொன்னார்

வற்றிய கிணற்றின் காணலை உறிஞ்சி
எழுந்தடர்ந்து
ஆயிரம் கைவிரித்த ஆலம்
தன் அந்திமத்தில் கம்பூன்றி நிற்கிறது

பூச்சிகளும் மலடாகிவிட்ட பொட்டலில்
நெற்றியில் கரத்தை பந்தலிட்டு
திசை வெறித்த கிழவி
ஒருமுறை ஐயோவென சத்தமிட்டு
அமைதியானாள்

கையிலிருந்த
பேட்டை உயர்த்திக் காட்டுகிறான்
பேரன்

அருகில்
சுணக்கிக் கிடக்கிறது
கூவலைத் தொலைத்த சேவல்

செந்தாரப்பட்டி செல்வக்குமார்

# வெய்யில்



சதா நீரின் ஈரத்தோடு பயணிக்கும்
என்னை ஒரு காதலனைப்போல ஆரத்
தழுவிக்கொள்கிறது வெய்யில்...

புலம்பெயர்ந்தவனின் நிலத்தில்
பெருமழைக்கு பின்பாக வாசல் தீண்டும் வெய்யிலென
மெல்ல என்னுள் கதகதப்பாய் இறங்குகிறது
வெய்யில்...

நீண்ட நாட்களுக்குப் பின் சந்திக்கும் தோழமையிடம்
பேச்சற்று நிற்கும் ஆரம்ப கணத்தின் விழி
பரிமாறலாய் வருடுகிறது வெய்யில்...

நோயுற்று உள்ளடைந்தவனின்
ஒரு நாள் வெளிப் புழக்கத்தில்
கண்களை சுருக்க வைத்து
புன்னகையை மீட்டும் இதமென
என் மேல் ஊருகிறது வெய்யில்...

உறக்கம் கலைந்த நள்ளிரவின்
ஒரு கோப்பை காஃபியின் சுவையென உடலெங்கும்
பரவுகிறது வெய்யில்...

யாருமற்ற நள்ளிரவில் தூரத்தில்
ஒலிக்கும் வாகனத்தின் ஒலி
கிளறும் பழைய நினைவுகளென
மெல்ல பரவுகிறது வெய்யில்

நீண்ட காலத்திற்குப்பின்
குளிர்கால ஆடையென போர்த்திக்கொள்கிறேன்
வெய்யிலை...

இப்போது
மீண்டும் என்னுள் துளிர்க்கிறது ஒரு மழைக்கால
கனவு!

➤ கோ.லீலா

## ஹைக்கூ



1.அடர் இருட்டிலும்
நம்பிக்கை இழக்கவில்லை
மின்மினிப் பூச்சி!

2. குளத்தில் மிதந்தபடி
விண்ணை மறைக்கிறது
ஆகாயத்தாமரை !

3. கோவில் கற்சிலை
சிரித்தபடி இருக்கிறது
செவ்வரளி பூக்கள்!

4..வேப்பங் காற்று
நினைவை மீட்டுகிறது
மரத்தடி பள்ளி !

➤ நெல்லை. க.சோமசுந்தரி

ஏக்கர் கணக்கில் பயிரிட்டு விவசாயம் பார்த்த
பாட்டன் வழி வந்த
எங்கள் தாத்தா
தனக்கான நிலத்தையும் வாரிசுகளுக்கு
பிரித்துக்கொடுத்ததும்
அவர்கள்
அதை கூறுபோட்டு கெடுத்ததில் தற்போது
பெருநகரின் பிரம்மாண்ட அடுக்குமாடி குடியிருப்பின்
மூணுக்கு மூணு பால்கனியின் ஓர்
ஓரத்தில் தொட்டிச்செடியில் தனக்கான கொத்தமல்லி
கானகத்தில் வாழ்ந்துவருகிறார்!

➤ நா.கி.பிரசாத்



தாங்கியிருக்கும்
மூங்கில் கழிகளின்
முனை மழுங்கி போனதில்
பாம்பும், பல்லியும்
ஊர்வதை மறந்து
சறுக்கி விளையாடி செல்கிறது.

கிளிகள் தவற விட்ட
பழுத்த வேப்பம் பழ கொட்டை
வீட்டின் உச்சியில் பூசிய
ஆத்து மணலில்
தன்னை பொதிந்து கொள்ள,
கர்ப்பம் தரித்த
மணல் மேடுகள்
வேர் விட காத்திருக்கிறது.

வேலை இழந்த
நெருப்பெறும்புக் கூட்டம்
திண்ணையில்
ஆங்காங்கே குழுமிய படி
பேச்சுவார்த்தை நடத்துகிறது.
கரையான் எதிர்ப்பு
போராட்டமாம்

இப்படி தனித்து விடப்பட்ட வீட்டை
தூரத்து உறவின ஊர்வன
நன்றாகவே
கவனித்துக் கொள்கிறது.

யாரோ ஒருவர்
உழைத்து ஓடாய் தேய்ந்து
சேமித்த நாட்கள்
ஒவ்வொன்றாய்
அடுக்கி வைத்து
அழகு பார்த்த ஓட்டு வீட்டை
ஓரமாய் ஒதுங்கி நின்று
பார்க்கிறேன்.

அள்ளி வீசிய வார்த்தைகள்
பரண் மேல் பல்லாங்குழி
ஆடிக்கொண்டிருக்கும் போல!
அங்கே தாழ்ப்பாள் போட்டு
அடக்கி வைத்திருக்கும்
வார்த்தையை கேட்டு
லேசாக ஆடியது விளக்கு மாடம்.

என் பார்வையின்
கணம் தாளாமல்
தன்னே கண்ணூறு கழித்த
ஓடொன்று விழுந்து சில்லாகிய
ஓசை கேட்டும் கேட்க்காமல்
மனதிலே கூவினேன்

இச்சா, இனியா, காயா, பழமா
அண்ணாந்து வான் பார்த்து
நொண்டி விளையாட்டை
மெச்சிக் கொண்டே
பால்யத்திலிருந்து
வளர்ந்து விட்ட
திருப்தியில் நகர்கிறேன்
நகர வாழ்வை நோக்கி.

➤ குடந்தை அனிதா



துளிக்காதல்
துளிக்கருணை
துளிக் கொஞ்சல்
துளி பொய்க்கோபம்
துளிக் குழைவு
துளிக் கனிவு
காட்டாமல் இருந்திருக்கலாம்.
நினைவேடு புரட்டுகையிலெல்லாம் பெருமூச்செறிந்து
நெஞ்சுக் கனத்து தொண்டைக் கமற கண்ணிறுக மூடி
கண்ணீர் கீழிறங்காது
மீண்டும் இயல்புக்குத் திரும்புதல்
துளி விஷமருந்துதல்.

➤ சுபி.

பிடித்த
ஒரு மழைக்கால
பொழுதாகயிருக்கட்டும்
இளந்தென்றல் வீசும்
ஓர் இளவேனிற்
காலமாகயிருக்கட்டும்
மனதை வருடிக் கொடுக்கும்
ஒரு பௌர்ணமி
இரவாகயிருக்கட்டும்
கனிந்து உதிராத
சொற்களின் காம்புகளுக்கு
அக்கணமெல்லாம்
பெரும் மலையை
சுமக்கும் வலிதானே......

➤ சித்ராபுபேஷ்குப்தா

# கருணைக் கடல்




அடங்காப் பசியோடு
அயராது பின் தொடர்ந்து
அலைகளை
கொத்திக் கொண்டேயிருக்கும்
பறவையொன்றுக்கு
உயிருள்ள ஒருமீனை
உணவாகத் தந்து
தாயாகிறது அக்கடல்.

➤ காசாவயல் கண்ணன்.

இதோ இந்த நொடி
எனக்குள் பரவும் ஆயிரம்
சிந்தனைகள்
உன்னில் இருந்து
தொடங்கியது தான்..,
எழும் அத்தனை கேள்விகளுக்கும்
என்னிடம் பதில் இல்லை..,
கேட்க வேண்டிச் சேர்த்த எந்த கேள்வியையும்
கேட்பதற்கு
என்னிடம் மொழியில்லை..,
மனம் முழுதும் கனமாகி,ரணமாகி
சிதைந்து கிடக்கிறது..,
இறுதியில்
வாழ்ந்து கொண்டே செத்துக்கொண்டிருக்கிறேன்..,
செத்துக்கொண்டே வாழ்ந்துக்கொள்கிறேன்
உன் நினைவுகளால் மட்டும்..!!!

➤ மீ. யூசுப் ஜாகிர்

## எனது எழுத்துக்கள்....



விடியலில் அஸ்தமனம்
குழம்பில் கொதிக்கிறது
கூவிய சேவல்..!

புதிய நூல் தான்
தைத்தது
பழைய துணியை...!

➤ வே.மு.ஜெயந்தன்

கடற்கரைக்கு சென்று விட்டு கைப்பிடியளவு
கரையோர மணலை எடுத்து வருகிறாள் குட்டிமா....

வீட்டிற்கு வந்து தாம்பாளத்தில் வைத்து சிறிது
தண்ணியும் ஊற்றுகிறாள்....

வீட்டிற்கு நீல நிறத்தில் வர்ணம் அடித்து இருப்பதால்
சுவரின் நிறம் தாம்பாளத்தில் தெரிகிறது...

மின்விசிறி காற்றில் லேசாக அலைகள் வருகிறது...
நீல நிறத்தில் சிறு சிறு அலைகளை பார்த்துவிட்டு ஐ
குட்டி கடல் என்கிறாள் குட்டிமா...

அதனை வெளியில் கொண்டுவந்தும் வைக்கிறாள்
அதில் வானம் தெரிகிறது மேகம் தெரிகிறது...
இரவானதும் விண்மீன்களும் வெண்ணிலவும்
தெரிகிறது...

என்ன ஒரு ஆச்சரியம்... அந்தக் கடலுக்கு அக்கரை
இல்லை என்பது போல... இவளின் ஆனந்த மன
கடலுக்கும் எல்லை இல்லாமல் போய் விடுகிறது....

➤ பன்னீர்செல்வம்



ஒரு புத்தகம் பரிசளிக்கப்படுகிறது
அதில் ஏதேனும் இரகசிய செய்தி
மறைந்திருக்கலாம் என
அடிக்கோடிடப்பட்ட வாக்கியங்களில்
தேடுகிறேன்...

ஒரு கவிதை பரிசளிக்கப்படுகிறது
அதன் பொருளுக்குள்
ஒளிந்திருக்கும் எனக்கான செய்தியினை
எழுத்துகளுக்கிடையே துளாவுகின்றேன்...

ஒரு பாடல் பகிரப்படுகிறது...
மீண்டும் மீண்டும் கேட்டு
அதில் சொல்ல வருவதை தெளிந்தறிவேன்..

ஏனென்றால்
நானும் ஒரு செய்தியினை அப்படித்தான் அனுப்பி
வைப்பேன்..
ஒரு புத்தகமாக
ஒரு கவிதையாக
ஒரு பாடலாக !

➤ சபேஷா கண்ணதாசன்

முகையவிழும் கணத்திற்குள்
முகிழ்த்திருக்க வேண்டும்.
செங்கதிர் பனித்துளியைப்
சுவீகரிக்கும் காலத்திற்குள்
மலர்ந்திருக்கலாம்.
சாலையில் கடக்கும் சமயத்தில்
சைகையால் புன்னகைத்த குழவியின்
புன்னகை மலர்ந்த தருணமாயிருக்கலாம்.
சங்க இலக்கியக் காதலை
விழிகள் பிரசவிக்கும் நொடிப்பொழுதில்
மின்னலிட்ட அன்பின் பேரூற்றை
சந்தித்த பொழுதில் கண்களில்
முழுமதி.

➤ மு.கீதா



ஈரமணல்
நடக்கும் குழந்தை
சுவடுகளில் நிலவு

➤ ஆடலரசன் குடந்தை

என் மகிழ்வின்
கொள்ளளவை நீங்கள்
நிர்ணயிக்க இயலாது

எனக்குண்டான பாத்திரத்தின் அளவை நானே
வடிவமைத்துக்கொண்டிருக்கிறேன்

உங்களின் கற்பனைக்கு
ஓர் வடிவம் அளித்து
நீங்கள் எனக்காய் அளிக்கும் பிம்பக்கூடுகளில்
என் ஆவி தரிக்காது

எதையெல்லாமும் நீங்கள்
செவிமறக் கேட்டுப் புறம் பேசும் பொழுதுகளில் என்
அகம் நினைத்து நகைத்து ஓர் பறவையைப் பூவை
அல்லது புத்தசத்தியத்தை
இதோ இன்று கேட்கவிருக்கும் பாடல்களைப் பற்றிய
யோசனையில் இருக்கும்

நிபந்தனை மிகுந்த
உங்கள் புகார்களில்
நம்புங்கள் என் பெயரைக் கூட
நீங்கள் உச்சரிக்கத் தரமாட்டேன்..

➤ உமா மஹேஸ்வரி பால்ராஜ்.



போனால் போகட்டும்!
விட்டு விடுங்கள்!
அவர்கள் திட்டினார்கள் என்று
உங்களுக்கு வலிக்கவா போகிறது?

போனால் போகட்டும்!
விட்டு விடுங்கள்!
அவர்கள் சபித்தார்கள் என்று
வாக்கு பலிக்கவா போகிறது?

போனால் போகட்டும்!
விட்டு விடுங்கள்!
அவர்கள் முகம் திருப்பிக் கொண்டால்
உங்கள் செல்வாக்கு குறையவா போகிறது?

போனால் போகட்டும்!
விட்டு விடுங்கள்!
அவர்கள் வழி மறித்தால்
உங்கள் பாதைகள் முடியவா போகிறது?

போனால் போகட்டும்!
விட்டு விடுங்கள்!
உங்கள் உள்ளத்தை படிக்கத் தெரியாத ஊமை
விழிகளுக்கு
இனியும் பார்வை கிடைக்கவா போகிறது?

நியாயங்கள் வேண்டுமென்று
கண்ணை கட்டிக் கொள்ளும் போது
நிரூபித்துக் காட்டி என்ன பலன் கிடைக்கப் போகிறது?

➤ பாத்திமா சுமையா


RN BALAJI PRODUCTION
FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP - MARUTHA NAYAGAM BOSE - MUSIC - DEV PRAKASH
EDITING -TAMILARASAN - CHOREOGRAPHER - ABU&CHALAS - PRO - NIKIL MURUGAN
CO PRODUCERS - MOHAMED ALI JINNA.M - SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY-BALAJI NEDUNCHEZHIYAN